★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 12உ செவ்வாய் (24—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 13உ புதன் (25—4—56) [இதழ் 267

கடல் கடந்த தென்னகத்துத் தொழிலாளருக்குத் தொல்லை?

கோலாலம்பூர், ஏப். 23—

கம்யூனிஸ்டு கலகக்காரர்களை ஒடுக்குவதற்கென இங்கு அரிசி 'ரேஷன்' குறைக்கப்பட்டுள்ளதால் உணவு போதாமல் செலாங்கூரில் செமினே, காஜாங் 'எஸ்டேட்'களில் வேலை செய்து வாழும் ஆயிரக்கணக்கான தென்னகத்துத் தொழிலாளர்கள், தங்களது வேலையை விட்டுவிட தீவிரமாக யோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

'சுதந்திரம் பெற்றவர்கள் இந்தியாவைத் துண்டாடியது ஏன்?'

'பெருமையை அவர்களே வைத்துக்கொள்ளட்டும்; ஆனால் பிறரை ஏசிப்பேச வேண்டாம்'

'எதற்கும் அளவு உண்டு என்பதை மறக்க வேண்டாம்'

சென்னைக் கூட்டத்தில் திரு. பி. டி. இராசன்

" தாங்கள் மந்திரி சபை அமைத்திருக்கிறோம் என்பதால், பிறத்தியாரைக் கேவலமாகப் பேசுகிறார்கள். அர்த்தால் நடத்தியவர்களைக் கேவலப்படுத்த நினைக்கிறார்கள்.

" 'நாங்கள்தான் சுதந்திரம் வாங்கினோம்' என்று பெருமை பேசுகிறார்கள்; உண்மையில் இவர்கள் சுதந்திரம் வாங்கியிருந்தால் அப்படிப் பேச மாட்டார்கள்.

" நிதி அமைச்சராக—நீதி அமைச்சராக—படிப்பு அமைச்சராக உள்ள திருவாளர் சி சுப்பிரமணியம்தான் இந்தப் பெருமை பேசுகிறார்; 'சுதந்திரத்தை யார் கையில் பிரிட்டிஷார் கொடுத்துச் சென்றார்கள்—ராஜன் கையிலா? அல்லது திராவிடர் இயக்கத்தவர் கையிலா?'—என்று கேட்கிறார், அவர்! உண்மைதான்; பிரிட்டிஷார், எங்கள் கையில் சுதந்திரத்தைக் கொடுக்கவில்லைதான்.

" ஆனால், பெரிய மனிதர்கள் எப்போதும் தங்களைத் தாங்களே பெரிய மனிதர்கள் என்று கூறிக்கொள்ள மாட்டார்கள். தாங்கள் உண்மையில் பெரிய மனிதர்கள் என்றால், பிறர் தங்களை அவ்வாறு கூறவேண்டுமென்றுதான் நினைப்பார்களே தவிர, தாங்களே கூறிக்கொள்ளமாட்டார்கள்.

" இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றதாகக் கூறுகிறார்களே, இவர்கள் எப்படிப்பட்ட சுதந்திரம் பெற்றார்கள்?

" இந்தியாவை, இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரே குடையின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்று பெரிய பெரிய தளபதிகள்—படையெடுப்பாளர்கள்—மன்னர்கள் எல்லாம் ஆசைப்பட்டார்கள்; ஆனால், முடியாது போயிற்று. வெள்ளைக்காரர்கள்தான், அந்த பெரிய தளபதிகள் மனதில் நினைத்தவற்றிற்கு—கொண்ட ஆசைகளுக்கு உருக்கொடுத்தார்கள்.

" ஒரு சின்னஞ்சிறு தீவைச் சேர்ந்த பிரிட்டிஷாரால் மட்டுமே இந்தியாவை ஒன்றுபடுத்த முடிந்தது; இந்தியா முழுவதையும் கட்டி ஆண்டார்கள். ஆனால், வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் வாங்கியதாகப் பெருமைபேசும், காங்கிரசார்தான் இந்தியாவை இரண்டு துண்டாக வெட்டினார்கள்—வெட்டச் சம்மதித்தார்கள்!

" தங்களுக்கு இருந்த பதவி ஆசைக்காக, ஒன்றுபட்டிருந்த இந்தியாவை இரண்டு துண்டுகளாக்கிக் கொண்டார்கள். எங்கேயோ உள்ள சிறு தீவு ஒன்றில் வாழும் வெள்ளையர்களால், இந்தியாவை ஒரே குடையின்கீழ் வைத்து, ஒன்றாக ஆள முடிந்ததே; ஆனால், சுதந்திரம் பெற்றதும் அது ஏன் முடியாது போய் விட்டது என்று வெளிநாட்டார் கேட்டால், தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளத்தானே வேண்டியுள்ளது!

" உலகத்தில் எந்த நாட்டையேனும் அடிமை கொண்டு ஆட்சி செலுத்திவந்த எவரும், வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியதுபோல வெளியேறியது உண்டா—என்று கேட்க விரும்புகிறேன்.

" நாங்கள், அந்த நாட்களில் கூறியதெல்லாம்—நாம், நமக்குள் கொண்டுள்ள வேறுபாடுகளை ஒழித்துவிட்டால், வெள்ளையர் தாங்களாகவே வெளியேறி விடுவர் என்று கூறினோம். இதற்காக எங்களை அன்றும் எத்தனையோ ஏசினார்கள்; இன்றும் துரோகிகள் என்று ஏசுகிறார்கள்.

" சுதந்திரம் பெற்றதாக இவர்கள் கூறிப் பெருமை படைவதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை; ஆனால், இதரர்களை துரோகிகள் என்னும்போது, நாம், இவர்களது யோக்கியதையைப்பற்றிப் பேச வேண்டியவர்களாகிறோம். எதற்கும் ஒரு அளவு உண்டு; அந்த அளவை மீறவேண்டாம் என்று கனம் நிதி—நீதி—படிப்பு மந்திரி சுப்பிரமணியம் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்"

இவ்வாறு, சென்னை—சேப்பாக்கத்தில் நடைபெற்ற தோழமைக் கழகத் துவக்க விழாக் கூட்டத்தில் பேசுகையில், திரு. பி. டி இராசன் அவர்கள் குறிப்பிட்டுக் கூறினார்.

★ நிகழ்ச்சிகள் :

சென்னை-சேப்பாக்கம் 40-வது வட்டத்தில், தோழமைக் கழகத் துவக்க விழா 23—4—56 மாலை 6 மணி யளவில், பார்த்தசாரதி நாயக்கர் தெருவில் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்திற்கு தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தலைமைதாங்கினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின், திரு. பி. டி. இராசன் அவர்கள் அரியதோர் பேருரை நிகழ்த்தினார்.

அம்முதுபெரும் பண்பாளர் ஒன்றரை மணி நேரத்திற்கும் அதிகமாக அரசியல் விளக்கங்களைத் தந்துகொண்டிருந்தபோது, மக்கள் அனைவரும் முழு அமைதியோடு அமர்ந்து உரை கேட்டுப் பயன் பெற்றனர்.

தோழமைக் கழகத்தை திரு. இராசன் துவக்கிவைத்தார்.

இறுதியாக தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இளைஞர் நாடக மன்றத்தைத் துவக்கி வைத்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

'பம்பாயைப் பெற்று வா! இல்லையேல் பதவியை விட்டு வா!'

போர்ப் பாதையில் மாராட்டியர்!

காங்கிரஸ் மேலிடம் கதி கலங்குகிறது!

போர்க்கொடி உயர்த்தப்படுகிறது! படைவரிசை திரளுகிறது!

நிதி அமைச்சர் தேஷ்முக்கிற்கு தொகுதி வாக்காளர் கட்டளை

பதவி விலகும் விழைவை மந்திரியும் பிரதமருக்கு அறிவித்துவிட்டார்

மாகாண சீர்திருத்த மசோதா மக்கள் சபையில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

மசோதாவில் ஒப்புக்கொள்ளப்பட்ட பம்பாய் முடிவை மாராட்டிய மக்கள் இப்பொழுதும் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

பம்பாய் நகரை எப்படியும் பெற்றே தீருவது என்ற உறுதிப்பாடு உடையவர்களாக, மாராட்டிய மக்கள் இன்றும் உள்ளனர்.

மாராட்டிய மண்டலத்தின் சார்பில் மக்கள் சபை உறுப்பினர்களாக வீற்றிருப்பவர்களுக்கும், இந்தியப் பேரரசில் அமைச்சர்களாகப் பொறுப்பேற்று இருப்பவர்களுக்கும், 'பம்பாயைப் பெற்று வா! அல்லது பதவியை விட்டு வா!' என்ற கட்டளையை மாராட்டிய மக்கள் பிறப்பித்துள்ளனர்.

அக்கட்டளையை ஏற்று, தமது பதவியைவிட்டு வெளியேறிவிடுவது என, நிதி அமைச்சர் தேஷ்முக் தீர்மானித்துவிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

9,000 பேர் கைது

கல்கத்தா, ஏப். 23—

பீகார்—மேற்கு வங்கம் இணைப்பை எதிர்த்து, எட்டு வார காலமாக நடைபெற்றுவரும் 'சத்தியாக்கிரக'த்தை ஒட்டி, இதுவரையில் 9,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ரஷ்யாவும் ஓரளவுக்குக் காரணந்தானும்!

'கொஞ்ச நாட்களாக பிரிட்டனுடன் சரியான உறவு ஏற்படாமலிருந்ததற்கு ரஷ்யா ஓரளவுக்குக் காரணம்,' என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின், பிரிட்டனிலுள்ள பர்மிங்காம் நகரசபை வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

" மாகாண சீரமைப்பு மசோதா வெளியானதும், அது இந்தியா முழுவதையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டது; அந்த மசோதா வெளிவந்ததும், பெரிய பெரிய புத்திசாலிகள் எல்லாம் நிலைதடுமாறினார்கள்; தங்கள் புத்திசாலித்தனத்தை இழந்தார்கள். இந்தியாவெங்கும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

" என்னுடையதனிப்பட்ட கருத்தெல்லாம், மாகாண சீரமைப்பு மசோதாவை இவ்வளவு அவசர அவசரமாகக் கொண்டுவந்திருக்க வேண்டியதில்லை என்பதுதான். சாவதானமாக—நிதானமாக—அவசரப்படாமல் மாகாண சீரமைப்புத் திட்டம் வெளியிடப்பட்டிருக்குமானால், கண்ணியமாக இருந்திருக்கும்; அமைதி கெட்டிருக்காது.

" முதலில் மாகாண சீரமைப்புக் குழுவின் அறிக்கை வந்தது. அந்தக் குழு செய்திருந்த சிபாரிசை ஏற்றுக்கொள்வதானாலும் கொள்ளலாம்; ஒதுக்கி வைத்து விடுவது என்றாலும் விடலாம். இந்தச் சிபாரிசுகளை, மக்கள் சபையில் விவாதத்திற்கு வைத்து, முடிவுகளை அதன் விருப்பத்திற்கு மேற்கொள்ள அனுமதிக்காமல், இந்திய அரசாங்கத்தார் தாங்களாகவே முடிவுகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

" மொழிவாரியாக மாகாணங்களைத் திருத்தி அமைப்போம்—என்று, காங்கிரசார்தான், 25 ஆண்டுகளுக்கு மேலாகக் கூறிவந்தார்கள்; தெலுங்கு மக்களுக்கு ஆந்திராவை அமைத்துத் தந்தார்கள்; மொழிவாரியாக மாநிலங்கள் அமைப்பதற்கு அதன் மூலம் வித்திட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

மாநில மாநாடு—திருச்சி

உங்களுக்குக் கிடைக்கவிருக்கும் கருத்து விருந்து!

1. விடுதலைக் கிளர்ச்சிகள்
2. உரிமைக் கிளர்ச்சிகள்
3. தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்
4. தனிநாடு அமைப்பும்—பொருளாதார வசதிகளும்
5. மொழிப் பிரச்சினை
6. திராவிடத்தின் உலகத் தொடர்புகள்
7. தாய்க்குல வரலாறு
8. கலையில் கருத்துப் புரட்சிகள்
9. புத்தர் நெறி
10. உலகைத் திருத்திய உத்தமர்கள்
11. தொழிலாளர் பிரச்சினை
12. இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பம்

—விளம்பரக் குழு

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—4—'56 செவ்வாய்

திருவள்ளூர் தேர்தல்!

இத்திங்கள் எட்டாந் தேதி மக்கள் சபைக்கு, திருவள்ளூர் தொகுதியில் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் உள்ளிட மொத்தத்தில் நால்வர் போட்டியிட்டனர்.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் கலந்துகொண்ட செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தலைவர் தோழர் கோவிந்தராஜுலு அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவரை எதிர்த்து, எந்த ஒரு அரசியல் கட்சியின் ஆதரவு சிறு அணுவளவும் இல்லாது சுயேச்சையாகப் போட்டியிட்ட தோழர்கள் மூவரும் தோல்வியுற்றனர். கட்டின முன்பணத்தையுங்கூட அவர்களால் பெற முடியாமல் போய்விட்டது.

திருவள்ளூர் தொகுதி துணைத் தேர்தல், குறிப்பிட்ட எந்த ஒரு பிரச்சினைமீதும் முடிவு எடுப்பதற்காக என நடத்தப்பட்டதல்ல. ஏற்கனவே அத்தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் இறந்துபடவே, அதை எப்படியும் நிரப்ப வேண்டுமே என்ற ஒரு சாதாரண நியாயப்படிதான் திருவள்ளூர் தொகுதியில் துணைத் தேர்தல் நடத்தப்பட்டு இருக்கிறது.

அந்தத் துணைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தலைவர் வெற்றி பெற்றிருக்கிறார். அந்த வெற்றி மிக மிகச் சாதாரணமானதாகும். அதற்கு எந்த வித அரசியல் சிறப்பும் கிடையாது.

ஆனால், அந்தச் சாதாரண தேர்தல் வெற்றியை, தட்சிணப் பிரதேசத்திற்குச் சாதகமாகத் தமிழ்மக்கள் கொடுத்த ஆதரவாகும் என காங்கிரஸ் வார இதழ் ஒன்று ஜெயபேரிகைக் கொட்டுகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளாகத் தான் நடத்தி வரும் தாக்குதலுக்கும், அவ்விதழ், அதை ஒரு பலமாகவும் பயன்படுத்திக் கொள்ளுகிறது.

அவ்விதழின் மதிப்பீடு, மக்களாட்சி முறைக்கு ஆக்கந் தரக் கூடியதாகாது. அதற்கு மாருக, மக்களாட்சி முறையின் உள்ளடக்கத்தைத் தவருக மக்கள் புரிந்துகொள்வதற்கே வழி செய்யக்கூடியதாகும்.

திருவள்ளூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற காங்கிரஸ் அபேட்சகரின் அரசியல் பூர்வோத்திரத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்கு முன்னதாக, மேற்படி துணைத் தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்கள் அனைவருடைய பலாபலத்தையும் அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. அதுவுமன்றி, அந்தத் தொகுதியின் நிலப்பரப்பையும், அங்கு வாழும் மக்களுக்குள்ள அரசியல் அறிவின் தராதரத்தையும், வாக்காளர்களின் எண்ணிக்கையையும், அம்மக்கள் சபை தொகுதியில் உள்ளடங்கியுள்ள சட்டசபை தொகுதிகளின் எண்ணிக்கையையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதும் இன்றியமையாததாகும். அப்பொழுதுதான், பிரஸ்தாப தேர்தல் முடிவைக் குறித்து ஒரு பொருத்தமான கருத்தைக் கொள்வதும் சாத்தியமாகும்.

திருவள்ளூர் மக்கள் சபைத் தொகுதி இரட்டை உறுப்பினர் தொகுதியாகும். அந்த இரட்டை உறுப்பினர் தொகுதியில் பத்து சட்டசபை உறுப்பினர் தொகுதிகள் அடங்கி இருக்கின்றன.

அத்தொகுதியில் உள்ள மொத்த வாக்காளர் தொகை பத்து இலட்சத்திற்குக் கூடுதலாகும். அத்தொகுதியும், எல்லா வகைகளிலும் பின்தங்கிக் கிடப்பதாகும்; குறிப்பிடத்தகுந்த அளவில் அரசியல் உணர்வு அங்கு ஏற்படவுமில்லை.

வடசென்னை - சூளை - புரசைவாக்கம்-திருவள்ளூர் - பொன்னேரி, ஸ்ரீபெரும்புதூர்-சைதாப்பேட்டை தாலுகாக்களை, அத்தொகுதி உள்ளடக்கிக்கொண்டு இருக்கின்றன, அந்தத் தொகுதியின் நிலப்பரப்பு பெரும்பாலும் செங்கற்பட்டு மாவட்டத்திலேயே சரி பகுதிக்கு கொஞ்சம் கூடுதல் என்றே சொல்லக் கூடியதாகும்.

அத்தொகுதியில் அடங்கியுள்ள பெரும் பகுதி, தமிழ்—தெலுங்கு ஆக இரு மொழி வழங்கும் எல்லையோரப் பிரதேசமாகும். இம்மொழி சிக்கலின் காரணமாகவே, தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளில் இடம் பெறும் அளவிற்கு, அப்பகுதியில் அரசியல் நடவடிக்கை இடம் பெறுவது கிடையாது.

அத்தொகுதியில் உள்ள வாக்காளர் தொகை பத்து இலட்சம் என்றுல், வாக்குப் பதிவுச் செய்யும் சாவடிகளோ ஏறத்தாழ 1,500-க்கு அதிகமாகும். இவ்வளவு வாக்குச் சாவடிகளிலும், தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் ஒவ்வொருவரும், தனித்தனியாக தங்களுக்கென ஏஜெண்டுகளை நியமித்துக் கொள்வது என்பதும் கனவிலும் கருதமுடியாத ஒன்றுகும்.

இவ்வளவு தேர்தல் சாவடிகளுக்கும் தேர்தல் அதிகாரிகளையும், அவர்களுக்கு உதவி செய்ய ஊழியர்களையும் நியமிப்பதில் ஒரு அரசாங்கத்திற்கே மூச்சுத் திணறிவிடுகிறது என்றுல், தேர்தலில் கலந்துகொள்ளும் ஒரு தனி அபேட்சகர் எவ்வளவு திண்டாடவேண்டி இருக்கும் என்பது சிந்திக்கத் தக்கது? நிற்க.

திருவள்ளூர் இரட்டை தொகுதியில், மக்கள் சபைக்கு நிற்கும் இரண்டு அபேட்சகர்களும், அத்தொகுதியில் சட்டசபைக்குப் போட்டியிடும் பத்து சட்டசபை அபேட்சகர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாகவாவது அல்லது ஒரு பொது ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டவர்களாவது இருந்தால்தான், அவர்களால் தேர்தலுக்கான நடவடிக்கைகளை கூடுமானவரை ஒழுங்காக செயல்படுத்த முடியும். இதை விடுத்து, தனித்தனியாக தேர்தலில் போட்டியிடுவது என்பது எந்த ஒரு தனி நபருக்கும், சக்திக்கு மீறிய செயலேயாகும்.

இந்தப் பின்னணியோடு, திருவள்ளூர் துணைத் தேர்தல் வெற்றியின் முடிவை ஆராய்வோம.

தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் தோழர் கோவிந்தராஜுலு அவர்கள் ஒரக்காடு ஜமீந்தார் ஆவார். செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிக் கழகத்தின் தற்காலத் தலைவரும் அவர்தான்.

அவரை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்ட மூவரும் எந்த ஒரு அரசியல் கட்சியின் பக்கபலத்துடனும் நின்றவர்கள் அல்லர். சொந்த பலத்திலேயே தேர்தலில் கலந்து கொண்டவர்களாவர்.

வாக்காளர் பட்டியலை நகலெடுக்க, பள்ளி ஆசிரியர்களையும், கழக அலுவலக ஊழியர்களையும், ஆணையிடும் அதிகாரம், காங்கிரஸ் அபேட்சகருக்கு நீங்கலாக, தேர்தலில் பங்கு கொண்ட மற்ற அபேட்சகர்களுக்கு அறவே கிடையாது. வாக்காளர்களை அணுகுவதற்கும், மேற்குறிப்பிட்ட வகையினரைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும், வசதியும், சுயேச்சை அபேட்சகர்களுக்கு எப்படி இருக்க முடியும்?

ஒரு மாவட்டத் தலைவர் குறிப்பிட்ட ஒரு தேர்தலில் கலந்துகொள்ளுகிறார் என்றுல், ஒவ்வொரு வட்டாரத்திலும் இருந்துவரும் மாவட்டக் கழக உறுப்பினர்கள், அதிலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், தலைவர் வெற்றிக்குப் பாடுபடுவதைத் தானே எதிர்பார்க்க முடியும்? அதுதானே இத்துணைத் தேர்தலில் நடைபெற்றும் இருக்கிறது.

இத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட அபேட்சகர் ஒருவர், தட்சிணப் பிரதேசப் பிரச்சினையை தனது தேர்தல் கோரிக்கையில் குறிப்பிட்டிருந்தாராம். தேர்தலில் அவர் தோற்கவும், காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெறவும் நேர்ந்துவிட்டதால், தட்சிணப் பிரதேசக் கருத்தைத் தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று விளக்கமாகிவிட்டது என்பதுதான், காங்கிரஸ் வார ஏட்டின் ஜெயபேரிகை!

தனது தேர்தல் வேண்டுகோளில் தட்சிணப் பிரதேச எதிர்ப்பை சுயேச்சை உறுப்பினர் வெளியிட்டு இருந்த பொழுதே, அந்த அறைகூவலை தேர்தல் பிரச்சினையாக ஒப்புக்கொண்டு காங்கிரஸ் அபேட்சகர் எதிர் அறைகூவல் விட்டிருக்க வேண்டும். அப்படி ஒன்றும் எதிர் அறைகூவல் விடவில்லை காங்கிரஸ் அபேட்சகர்.

வெற்றி பெற்ற அபேட்சகரே, தேர்தல் வெற்றியை எந்த ஒரு பிரச்சினைமீதும் ஏற்றிச் சொல்லாதிருக்கும்பொழுது, காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே நடைபெற்றுவரும் கோஷ்டிச் சண்டைக்கு இரவல் குரல் கொடுத்துவரும் ஒரு ஏடு, தேர்தல் வெற்றிக்கும் தட்சிணப் பிரதேச பிரச்சினைக்கும் முடிச்சுப் போட்டு, ஜெயபேரிகை அடிக்கக் கிளம்புவது பொருத்தமற்றதாகும். அரசியல் அநாகரிகமும் அது.

அத்தொகுதியில் மொத்த வாக்காளர்களான பத்து இலட்சம் பேர்களில், மூன்று இலட்சம் பேர்களாவது தேர்தலில் கலந்து கொண்டிருந்தாலாவது, காங்கிரஸ் வெற்றிக்கு ஏதாவது ஒரு அரசியல் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் தேர்தலில் வாக்களித்தவர் தொகையோ ஒரு இலட்சத்திற்குக் கொஞ்சம் கூடுதல். மீதமுள்ள எட்டேமுக்காலே மூன்று வீச இலட்சம் வாக்காளர்கள் தேர்தல் சாவடிக்கே எட்டிப் பார்க்கவில்லை. அப்படி கூறுவதுகூட பொருத்தமானதல்ல. தேர்தல் என ஒன்று நடக்கிறது என்பதாகக்கூட, அந்த இலட்சக்கணக்கான வாக்காளர்கள் அறியமாட்டார்கள்!

பிரஸ்தாப காங்கிரஸ் வாரஇதழின் அழுக்காறு நிர்ணயிப்புப்படி, நாமும் பேசுவதானுல், தேர்தலில் வாக்களிக்காமலே இருந்துவிட்ட எட்டு இலட்சத்திற்குக் கூடுதலான வாக்காளர்களும், ஏதோ ஒரு பெரிய அரசியல் காரணத்திற்காகத்தான் தேர்தலில் கலந்துக் கொள்ளாமலே இருந்துவிட்டார்கள் எனக் கற்பனையாகக் கூற முடியும். அக்கற்பனை பொருத்தமானதாகக் கூட இருக்கும்.

அதாவது, காங்கிரஸ் ஆட்சியில் தங்களுக்கு ஏற்பட்டு வரும் கேடுகளைக் கண்டிக்கும் கருத்துடன்தான் கட்டுப்பாடாக தேர்தலையே பகிஷ்கரித்து விட்டார்கள் அத்தொகுதி பெரும்பாலான வாக்காளர்கள் என்று, நாமும் மதிப்பிட்டுக் கூறமுடியும். ஆனால் ஏட்டிக்குப் போட்டியாக பித்தலாட்ட ஜெயபேரிகை முழங்க நாம் தயாராக இல்லை.

காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றிபெற்ற தோழர் கோவிந்தராஜுலு அவர்களின் அரசியல் வரலாறு அறிந்துக் கொள்ள வேண்டியதாகும்.

சென்ற பொதுத்தேர்தலின் போது, பொன்னேரி தொகுதியில் தம்மை ஒரு காங்கிரஸ் அபேட்சகராகப் பொறுக்க வேண்டுமென, காங்கிரஸ் தேர்தல் குழுவிற்கு மேற்படி ஒரக்காடு ஜமீன்தார் மனுச்செய்து கொண்டிருந்தார். அந்த மனு நிராகரிக்கப்பட்டு, பொன்னேரி தொகுதியின் காங்கிரஸ் அபேட்சகராக நிரந்தர அமைச்சர் மீஞ்சூர் பக்தவத்சலம் அவர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார். தம்மைத் தேர்ந்தெடுக்காததற்காக ஆத்திரங் கொண்டு, காங்கிரஸ் கட்சிக்காரரான ஒரக்காடு ஜமீன்தார், காங்கிரஸ் கட்டுப்பாட்டைக் குழிதோண்டி புதைத்துவிட்டு, தேர்தல் அபேட்சை மனு கொடுக்க வேண்டிய நாளில், பொன்னேரி தொகுதிக்கு அபேட்சை மனு தாக்கல் செய்துவிட்டார். பரிசீலனை செய்யப்பட்டபொழுது, ஜமீன்தார் மனுவில் ஏதோ கோளாறு இருப்பதாகக்கூறி, அம்மனு தள்ளப்பட்டுவிட்டது. ஏமாற்றம் அடைந்த ஜமீன்தார், அதே தொகுதியில் பி. சோ. கட்சியின் சார்பில் போட்டியிட்ட அபேட்சகருடன் தீவிரமாக ஒத்துழைத்து, காங்கிரஸ் அபேட்சகரான மீஞ்சூராரை தேர்தலில் மண்ணைக் கவ்வச் செய்தார்.

அதன்பிறகு செங்கற்பட்டு மாவட்டத் தேர்தல் வந்தது. அதற்குள்ளாக திரைமறைவில் ஏதேதோ வாக்குறுதிகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு, ஒரக்காட்டாருக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாவட்டக் கழகத் தலைமை தரப்பட்டது. திரைமறைவு உடன்பாட்டின் ஒரு பகுதி செயலாற்றப்பட்டு விட்டது. மற்றொரு பகுதி, மீஞ்சூர் பெரியாரின் எதிர்கால அரசியல் வெற்றி-தோல்வியில் தான் அரங்கேற்றமாகும். நிற்க.

திருவள்ளூர் தொகுதி தேர்தலில், அமைந்தகரை அருகிலுள்ள நடுவங்கரை பிர்க்காவில் மொத்தம் 1,200 வாக்குகள் உள்ளன. அவைகளில் இரண்டே வாக்குகள்தான் தேர்தலில் பதிவாயின.

பதிவான அவ்விரண்டு வாக்குகளும் யாருடையன என்று எண்ணுகிறீர்கள்?

ஒரு வாக்கு மணியக்காரருடையது; மற்றொரு வாக்கு கர்ணத்துடையது!

இந்த இரண்டு வாக்குகளும் தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்துத் தரப்பட்டதா அல்லது எதிர்த்துத் தரப்பட்டதா என்பதற்குரிய விளக்கத்தை, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்துப் பூரிக்கும் காங்கிரஸ் வார இதழ்தான் கூற வேண்டும்!

• திருவள்ளூர் தொகுதியில் அடங்கி உள்ள பத்து சட்டசபைதொகுதிகளிலும், சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டது. அவைகளில் எட்டு இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்கள் மண்ணைக் கவ்வினர். அதில் நிரந்தர மந்திரி பக்தவத்சலம் அவர்களும் ஒருவராவர். வெற்றி பெற்ற எட்டு காங்கிரஸ் அல்லாத அபேட்சகர்களில் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர்கள் அந்தோணி அவர்களும், பக்கிரிசாமி அவர்களும் உள்ளனர்.

ரூ. 5 கோடி செலவில்!

இந்திய மருத்துவ முறை பரவலாக்கப்படுமாம்!

சென்னை, ஏப். 22—

இந்தியப் பேரரசின் பல்வேறு மாநிலங்களைக் கலந்து ஆலோசனை செய்ததின்மீது நாட்டிலுள்ள 13 ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளையும், 255 மருத்துவ மனைகளையும் முன்னேற்றம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். முன்னேற்ற வேலைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை இந்தியப் பேரரசினர் 2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்கள்.

இன்னும் புதிதாக 5 இந்திய மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பது பற்றி மத்திய சர்க்கார் யோசித்து வருகின்றனராம். அடுத்த ஐந்தாண்டுகளில் நாடு முழுமையும் மேலும் ஆயிரம் மருத்துவ மனைகளைத் திறப்பதற்கும் தீர்மானித்திருக்கிறார்களாம்.

இந்திய மருத்துவ முறையை பரப்புவதற்கு ரூ. 5 கோடி செலவில் அரசியலார் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நடவடிக்கை நேர்மையானதா?

புதுடெல்லி, ஏப். 21—

சர்க்கார் தஸ்தாவேஜுகளில் இந்திமொழியை பயன்படுத்துவதில் இரயில்வே 'போர்டு' முக்கியமானதொரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாம்.

1954—55-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையின் இரண்டு தொகுதிகளையும், 1954—55-ம் ஆண்டில் இந்திய இரயில்வேக்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டு வரும் சிறு புத்தகத்தையும் இரயில்வே 'போர்டு' தற்போது இந்தியில் தயாரித்து வெளியிட்டுள்ளது.

இப்புத்தகங்கள் மொத்தம் 1,500 பக்கங்கள் கொண்டவையாம்.

பாராளுமன்றத்தில் இரயில்வே அமைச்சர் இலாகா சம்பந்தமாக ஒப்படைக்கப்பட்ட வரவு-செலவு வெளியீடுகள் அனைத்தும் தற்போது இந்தியில் வெளியிடப்பட்டுள்ளனவாம்!

‘சண்டையிடும் கோழிகள்’

வல்லரசுக் கோஷ்டிகள் குறித்து குருஷ்சேவ் வர்ணனை

யுத்தம் கைவிடப்பட வேண்டிய ஒன்றென்கிருர்

லண்டன், ஏப். 20—

“சண்டையிடும் கோழிகள் போல நீங்கள் ‘நேட்டோ’விலும், நாங்கள் வார்சா ஒப்பந்தத்தின் கீழும் திரண்டு நின்று, ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டிருப்பது பயன் தராது”

“வழிதான் என்ன? யுத்தத்தை, ஒரேயடியாகக் கைவிட்டுவிட வேண்டும்; இராணுவத்தைப் படிப்படியாகக் குறைத்து இறுதியில் இராணுவம் இல்லாது அற்றுப்போகச் செய்ய வேண்டும்,”

என்று சோவியத் கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ், பிரிட்டிஷ் இராணுவ தளபதிகள் 250 பேர் முன்னிலையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

‘இங்கு உங்களிடத்தில் பேசுவதற்கு மகிழ்கிறேன். ஏனெனில் உங்களுக்கும்—எங்களுக்கும், தகராறு ஏதும் இல்லை.

‘நீங்கள் எங்களுக்குக் கடன்பட்டிருக்கவில்லை. அதுபோல நாங்களும் உங்களிடம் கடன்பட்டிருக்கவில்லை எனவே, ஒத்தமதிப்போடு, சமநீதி அடிப்படையில் பேசுவதே சாலச் சிறந்ததாகும்.

‘நமது பொது எதிரியை முறியடிப்பதற்காக, நம்மிடையே ஏற்பட்ட தொடர்புகள். யுத்தம்முடிந்த பிறகு நீடிக்காமற் போய்விட்டதற்காக வருந்துகிறேன்.

‘நம்மிடையே பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படுவதற்குத் தடையாக உள்ளவற்றைப் போக்கவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். தடைகள் நீங்கி பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், காலப்போக்கில் அது உண்மையான நட்பாக மலரும்,’ என்றும் அவர் குறிப்பிட்டாராம்

“நாம் இன்று, யுத்தம் என்றால் என்னவென்பதை அறிந்து கொண்டிருக்கிற மக்களிடையே வாழுகின்றோம். ஏனெனில், மிகக் கொடுமையான யுத்தம் ஒன்றின் விளைவுகளை அவர்கள் அனுபவித்திருக்கிருர்கள். ரஷ்ய மக்களும் யுத்தத்தை அனுபவித்தவர்கள்தான். எனவே, இதிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும் அதுதான் இனி உலகில் யுத்தமே கூடாதென்பதாகும்.

“இராணுவ பலத்தை அதிகரிப்பதற்காக, மக்களின் நலன்களுக்காகச் செலவிடக்கூடிய ஏராளமான செல்வத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறோம்.

“நாம், புதுப் புது யுத்தக் கருவிகளைக் காணுவதில் ஈடுபட்டிருக்கிறோம். புது யுத்தத் தந்திரங்களைக் கண்டறியமுற்படுகிறோம் இது, நரி தன் வாலைப் பிடிக்க தானே முயற்சிப்பதைப் போலாகும். ஏனெனில், இந்தக் காலத்தின் இந்த ஆண்டு, முதன்மையானது — முதல்தரமானது என்று கருதப்படும் ஒரு ஆயுதம் அடுத்த ஆண்டு பயனற்றதாகப் போய்விடக்கூடும்,”

என்றெல்லாம்கூட குருஷ்சேவ் விளக்கம் தந்து, யுத்தம் கைவிடப்பட வேண்டிய ஒன்று என்ற முடிவை வலியுறுத்தினாராம்.

பல்வேறு இரயில்வே தொழிற்சாலைகள்

ரூ. 46 கோடி செலவில் விரிவாக்கத் திட்டம்

புதுடில்லி, ஏப். 22—

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இரயில்வே தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கு 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 46 கோடி செலவழிக்கப்படுமென்று தெரியவருகிறது.

ஒவ்வொரு மாநிலத்தின் தேவை பற்றியும் இரயில்வே ‘போர்டு’ திட்டம் வகுத்துவருகிறதாம்.

1961-ம் ஆண்டிற்குள் இரயில் ‘எஞ்சின்கள்’ 1,550-ம், பிரயாணிகளின் பெட்டிகள் 5,800-ம், வாகன்களும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறதாம்.

தென்னிந்திய இரயில்வேயில் மற்றைய இடங்கள் உட்பட பெரம்பூர் தொழிற்சாலைகளும் விரிவாக்கப்படுமாம்.

போபாலுக்கு தி. கொ. மக்கள் ஏற்றுமதி

மேலும் 400 குடும்பங்கள் செல்லுகின்றன

போபாலில் மேலும் திரு-கொச்சி குடும்பங்களைக் குடியேற்றத் திட்டம் தயாராகி விட்டதாம்.

ஏற்கனவே, 200 குடும்பங்கள் அங்கு குடியேறியுள்ளன.

இதுவன்னியில் போபால் நகரிலிருந்து 75 மைல் தொலைவில் உள்ள சுல்தான்பூர் எனும் இடத்தில் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான 10,000 ஏகர் பரப்பளவுள்ள பண்ணை ஒன்றில் சுமார் 400 குடும்பங்களை—திரு-கொச்சியில் ஏழைகளாய்—நிலமற்றிருப்போரைக் குடியேற்றவும் திட்டம் தயாராகிவிட்டதாம்.

இந்த முடிவு, பண்ணையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பாசன வசதியுடைய நிலம் 5 ஏகரும், பாசன வசதியற்ற நிலம் 7 ஏகரும் தரப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பாசன வசதியுடைய நிலத்திற்கு ஏகர் ரூ. 75 வீதமும், பாசனவசதியற்ற நிலத்திற்கு ஏகர் ரூ. 50 வீதமும், பணம் வசூலிக்கப்படுமென்றும், 15 ஆண்டுகளுக்குள், வருடத்திற்கு இவ்வளவு என்று பல தவணைகளில் இந்தத் தொகை வசூலிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

என்றாலும், முதல் இரண்டாண்டுக் காலத்திற்கு, தொகை வசூலிக்கப்படமாட்டாதாம்.

சர்வாதிகார ஆட்சி முறைதானும்!

ஐசனேவர் மனப்பாங்கு

வாஷிங்டன், ஏப். 21—

“சோவியத் தலைவர்கள் கூட்டுப் பாதுகாப்புக் கொள்கையை ஆதரித்திருப்பினும், ஸ்டாலினை அவர்கள் நிராகரித்திருப்பினும் புதிய சோவியத் ஆட்சி முறை சர்வாதிகார ஆட்சி முறைதான்” என்று, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர் கூறியுள்ளார்

செய்திச் சுருள்

★

எலப்பாக்கத்தில் அண்ணு

16—4—56 இரவு 7-30 மணியளவில், எலப்பாக்கம் அருணாசலம் நினைவு மன்றச் சார்பில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமை தாங்கி, தி. மு. கழக நோக்கங்களை விளக்கிப் பேசினர்.

பின்னர்; அண்ணு அவர்கள் பேச எழுந்தபோது, பல சங்கங்கள், தி. மு. கழகக் கிளைகள் சார்பில் வாழ்த்து இதழ்கள் வழங்கப்பட்டன; கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அண்ணு அவர்கள், தென்னாட்டின் இன்றைய நிலைபற்றி விளக்கவுரை ஆற்றினர்.

தோழர்கள் வி. டி. அண்ணாமலை, சி. வி. இராசகோபால் ஆகியவர்களும் பேசினர். செயலாளர் நன்றி நவின்றார்.

பகுத்தறிவு மாநாடு

19—4—56 பிற்பகல் 2 மணியளவில், தாராவி—பம்பாய் ‘அன்பக’த்தில், சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றத்தின் முதலாவது ‘பகுத்தறிவு மாநாடு’ வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் தோழர் மா. இரா. ஏ. இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றபோது 25 உறுப்பினர்களைக் கொண்ட வரவேற்புக் குழுவும், 12 நடிகர்களைக் கொண்ட கலைக் குழுவும் அமைக்கப்பட்டது.

மாநாட்டில் கலந்துகொள்ள தமிழகத்திலிருந்து தலைவர்களை அழைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அண்ணாவைப் பற்றி எழுதி கலைமன்றத்தில் முதல் பரிசு பெற்ற எப். நான்சென்ஸ் அவர்கட்குப் பாராட்டும், தேநீரும் வழங்கப்பட்டது.

‘எட்டு ஆண்டுகளுக்கு முந்திய வருமான வரி வழக்குகளை மீண்டும் பரிசீலனை செய்ய சர்க்காருக்கு அதிகாரம் கோரப்படுவது, மோசடி சம்மந்தமானவைகளுக்காகத்தான்,’ என்று, நிதி மந்திரி தேஷ்முக், மக்கள்சபையில்தெரிவித்துள்ளார்.

இராயபுரம் இலக்கிய மன்ற சொற்பொழிவுகள்

22—4—56-ல், மேற்படி மன்றத்தின் சார்பில், பனைமரத்தொட்டி, சிவசுப்பிரமணியசுவாமி கோயில் மண்டபத்தில் ஓர் இலக்கிய சொற்பொழிவுக் கூட்டம் திரு. அன்புப்பழம்நீ தலைமையில் நடைபெற்றது, காசபார் திரு. துரையரசன் ‘இன்றைய தமிழகம்’ என்ற தலைப்பிலும், திரு நீல துரைக்கண்ணன் ‘நமது இலக்கியங்கள்’ என்ற தலைப்பிலும் பேசினர். பின்னர், திருவாளர்கள் கு. பெ. துரைசாமி, ம. செல்வராசன், சிவபிரகாசம் ஆகியோரும் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் மன்ற அமைச்சர் திரு. ம செல்வராசன் நன்றி நவின்றார்.

பைந்தமிழ்(நாடக)மன்றம்

15-4-56-ல் பெங்களூர்—சீராமபுரம், எர்ரப்பா பகுதியிலுள்ள மேற்படி மன்ற மனையில், தோழர் வி. கே. நடேசன் தலைமையிலும், தோழர் சு. கண்ணன் முன்னிலையிலும் மன்ற உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, பழைய வரவு-செலவு கணக்குகளை ஒப்படைத்த பிறகு, தோழர்கள் ஜி. சீனிவாசன் செயலாளராகவும், ப. பழம்நீ துணைச் செயலாளராகவும் எஸ். எஸ். துரைசாமி பொருளாளராகவும் மற்றும் 11-பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெயர் சூட்டல்

செம்பனார்கோயில் தோழர் டி. பி. ஆறுமுகம் அவர்களது ஆண் மகவுக்கு ‘வீரமணி’ எனப் பெயரிட்டதின் நினைவாக ‘நம்நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அன்பளிப்பு

திருச்சி — மேலக்கற்கண்டார் கோட்டை தோழர் நாராயணன் (டைலர்) அவர்களால் ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தந்த ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மாநில மாநாடு

அல்ஜீரியா - டுனீசியா - மொராக்கோ

எங்கும் விடுதலைக் கிளர்ச்சி

★

திராவிடம்

விடுதலை பெற - சமதர்மம் காண

அறப்போர் தொடுத்திடுவோம் வாரீர் திரண்டு!

திருச்சியில் மே 17,18,19,20-ல்!

...ந்திரம் பெற்றவர்கள்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

மக்களுக்கு ஆசையும் காட்டிவிட்டார்கள். இந்தியாவில் உள்ள இதர மக்களும் தங்கள் தங்களுக்கு மொழிவழியாக மாநிலம் அமைக்க வேண்டும் என்று கோரத் தலைப்பட்டார்கள். ஆனால் இந்திய சர்க்காரோ, தாங்கள் முன் கூறியதற்கு மாருக, 'மொழி வழி மாநிலம் கூடாது' என்று பேச முற்பட்டனர்.

"பம்பாய் மராட்டியத்துடன் சேர்க்கப்பட மாட்டாது என்று தீர்ப்புக் கூறப்பட்டபோது, மராட்டியம் முழுவதும் பெரும் கொந்தளிப்பு, குழப்பம் ஏற்பட்டது; இன்னும்கூட அங்கு அமைதி ஏற்படவில்லை; மறியலும், கிளர்ச்சியும் நடந்தவண்ணமுள்ளன.

"இதேபோல ஒரிசாவிலும், மேற்கு வங்காளத்திலும் பெரிய கிளர்ச்சிகள் நடைபெற்றன.

"அதே போலத்தான், தமிழ் நாட்டின் எல்லையோரத்தில் உள்ள பிரதேசங்கள் - தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் சேர்க்கப்படவில்லை. உடனே நாம், 'அந்த எல்லையோரப் பிரதேசங்களை, அங்கு வாழும் மக்களின் முடிவுப்படி விட்டுவிடுங்கள்; அந்த எல்லையோரப் பகுதிகள் கேரளத்துடன் இருப்பதா—தமிழகத்துடன் இணைவதா? ஆந்திராவில் இருப்பதா—தமிழ் நாட்டுடன் சேருவதா?—என்பதை, அந்தந்தப் பகுதிகளில் வாழ்வோரே முடிவு செய்யட்டும்; அவர்கள் இஷ்டப்படி நாம் நடந்து கொள்ளத் தயார்,' என்று தெரிவித்தோம்.

"ஆனால் இந்திய சர்க்கார், 'தேவிகுளம்—பீர்மேடு போன்ற எல்லையோரப் பகுதிகளை, அங்குள்ள மக்களின் முடிவுக்குவிட மாட்டோம்; எங்கள் இஷ்டப்படிதான் நடப்போம்; அந்தப் பகுதிகள் கேரளத்துடன்தான் இருக்கும்; தமிழ் நாட்டுடன் அவற்றை இணைக்கமாட்டோம்,' என்று கூறினார்கள்.

"அதனால்தான் தமிழ் மக்கள், தங்கள் கருத்தை—தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் பற்றிய தங்கள் எண்ணத்தை, ஜனநாயக வழியில், அமைதியான ஒரு அர்த்தால் மூலம் எடுத்துக் கூறினார்கள்.

"30 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் நான், 'அர்த்தால் கூடாது' என்று கூறினவன்தான்; 'மாணவர்கள் தங்கள் படிப்பைக் கெடுத்துக்கொண்டு, அர்த்தால்களில் பங்கு பெறவேண்டும் என்கிறார்கள்; எப்படி நியாயமாகும், இது? மக்களுக்கு வேலைகளைக் கவனிக்க முடியாமல், சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுகிறார்களே, இது எப்படிச் சரியானதாகும்?' என்று பேசினவன்தான்; ஏனெனில், அந்த நாட்களில், அர்த்தால் என்றால், நாம் பயப்படுகிறமாதிரியில்தான் இருக்கும்.

"அர்த்தால் பற்றி அப்படி ஒரு கருத்துக்கொண்டிருந்த நான், கூட இருந்த எல்லோரும் 'அமைதியாக நடந்து கொள்ளுவோம்' என்று கூறியதால், பிப்ரவரி 20ல் அர்த்தால் நடத்தச் சம்மதித்தேன்; அதே போலவே அர்த்தாலும் நடைபெற்றது. எப்படி நடைபெற்றது என்பது, மக்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழ் மக்களின் பெருமையை எடுத்துக்காட்டும் வகையில் அமைதியாக நடைபெற்றது.

"அப்படி நடைபெற்ற அமைதி நிரம்பிய அர்த்தாலைத்தான் சிலர் கேலி பேசுகிறார்கள். அவர்களுக்குத் தைரியமிருந்தால் கூறட்டுமே—'பிப். 20-ல் தமிழ் மக்கள் செய்தது தவறு'—என்று!

"மாநில சீரமைப்புக்குழு அறிக்கையை சட்டசபையில் விவாதிக்கும்போது, கனம் சுப்பிரமணியம் வெகு தீவிரமாகப் பேசினார். 'தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழ் நாட்டிற்கு வேண்டும்; அவற்றை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்,' என்று தீவிரமாகக் கூறினார்! நான்கூட அவரைப் பாராட்டினேன்—தமிழர் நலனுக்காக, இவ்வளவு தீவிரமாகப் பேசுபவரைப் பாராட்டத்தானே வேண்டும் என்பதால்! அப்போது சுப்பிரமணியம்கூட எனது பாராட்டுரை கேட்டு மகிழ்பவர்போலக் காட்சி தந்தார்.

"பின்பு சீரமைப்பு மசோதா சட்டசபையின் விவாதத்திற்கு வந்தபோது, நான், கனம் சுப்பிரமணியம் அவர்களைக்கேட்டேன்—'அன்று அவ்வளவு தீவிரமாகப் பேசினீர்களே; இன்று வேறு ஒன்று பேசுகிறீர்களே,' என்று! இதுதான் அவருக்கு என்மீது கோபப்படும்படியான — ஆத்திரப்படும்படியான நிலையை ஊட்டிவிட்டதுபோலும்!

"உடனே வசை பாட ஆரம்பித்துவிட்டார்— 'நேரு கூறுகிறார்; அதனால் ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்றும், 'மேலிடத்திற்குத்தான் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்' என்றும் அவர் கூறினார்.

"நேரு கூறினார் என்பதற்காக, தமிழ் மக்கள், தங்கள் கோரிக்கையை விட்டுவிட வேண்டும் என்றார் கனம் சுப்பிரமணியம்!

"நேருவைப் பற்றி நான் எதுவும், தனிப்பட்ட முறையில் குறை கூறுவதற்கில்லை; ஆனால் அவர்தான் கூறுகிற ஒவ்வொரு வார்த்தையையும் தராசில் வைத்து நிறுத்தி, எடைபோட்டுப்பேச வேண்டிய இந்தியாவின் பிரதமர் என்ற பதவியிலிருப்பவர். அவர் அப்படி கவனமாக, தான் பேசுவதைப் பிறர் எப்படிப் பொருள் படுத்துவார்கள் என்பதை எல்லாம் யோசிக்காமல், முன்சொன்னதை மறுத்து, நேர் முரணாகப் பின் பேசுபவராக இருக்கிறார். என்ன நடக்கும் என்ற விளைவுகளை யோசிக்காமல்—தெரிந்து கொள்ளாமல், எதையாவது கூறிவிடுகிறார்.

"25 ஆண்டுகளாக, மொழிவழியாக மாகாணங்களை அமைத்துத் தருவதாக மக்களுக்கு ஆசைகாட்டிவிட்டு இப்போது 'நவாப்' தர்பார் நடத்துவது போல, அதெல்லாம் முடியாது' என்றால் என்ன பொருள்?

"நவாப் தர்பார் என்றால், நவாப் கூறியதை எதிர்த்து எவரும் பேசக்கூடாது; 'உசூர்' என்று கூறிவிட்டு, பேசாமலிருந்து விடவேண்டும் என்பார்கள்; அது போல'நவாப்' தர்பார் நடத்த நினைத்தால் இந்தக் காலத்து மக்கள் ஏற்றுக்கோள்வார்களா? நீங்கள்தானே, மக்களின் விருப்பப்படி ஆட்சி நடக்கிறது—ஆட்சி நடத்துவோம்; அப்படிப்பட்ட அரசியல் முறைதான் ஜனநாயகம், என்று கூறுகிறீர்கள்? அப்படிக் கூறிவிட்டு, மக்கள் விருப்பத்திற்கு மாருக நடந்து கொள்வது எப்படி நியாயமானதாகும்?

"நாம், மக்களை மக்கள் என்று மதிக்கவேண்டும் என்று விரும்புகிறோம்; மதிக்கிறோம்; ஆனால் ஆட்சியாளர்கள், மக்களை மாடுகள் என்று நினைத்து நடத்துகிறார்கள்; இதை நாம் எப்படிக் கண்டிக்காமலிருக்க முடியும்?

"அபிப்பிராயங்களை ஒருவர் மாற்றிக் கொள்வது இயற்கைதான்; ஆனால் இதுபோல, நேற்று மாலைவரை ஒன்றைக் கூறிவிட்டு, மறுநாள் காலையில் வேறு ஒன்றைத் திடீரெனக் கூறும்போது, அந்த மாற்றத்திற்கு காரண விளக்கம்கூறவேண்டாமா?

"எதுவுமே சரியான காரணம் கூறாமல், 'மொழிவாரி மாநிலக் கோரிக்கைக்கு இணங்கமாட்டோம்' என்று பேசுகிறார்களே, எப்படி நாம் இதை ஏற்க முடியும்?

"இவர்கள் கூறுவதில் புதிதாக ஏதேனும், மக்கள் நலனுக்கு உகந்தது இருக்கிறதா, என்பதை யோசிக்கவேணும் அவகாசம் தராமல், இவர்களாகவே மேற்கு வங்கத்தையும் — பீகாரையும் இணைப்பது என்று முடிவு செய்தார்களே என்ன ஆயிற்று இப்போது? வங்காள மக்கள் அந்த முடிவை ஏற்றுக்கொண்டார்களா? பீகார் மக்கள் ஏற்றுக் கொண்டார்களா? இல்லையே! எதிர்த்துப் போராட்டம் அல்லவா நடத்துகிறார்கள்?

"அப்படி இருக்கும்போது, இங்கு, தமிழ் நாட்டில் சிலர், திடீரென 'தட்சிணப் பிரதேசம்' வேண்டும் என்று பேச முற்படுவது ஏன்?

(திரு. பி. டி. ராசன் அவர்களுடைய பேச்சு முடியவில்லை; தொடர்ந்து நாளை வெளிவரும்.)

இராமனுதபுரம் மாவட்டத் தோழர்களுக்கு:

இராமனுதபுரம் மாவட்டத்தில் ஏப்ரல் 26, 27, 28, 29 நாட்களில் அண்ணு அவர்கள் நிறைவேற்ற இருந்த சுற்றுப் பயணம் அவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி வேலைகளின் காரணமாக ஒத்திவைக்கும் படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள மாநில மாநாட்டு வேலைகள் தடையாக நிற்கின்றன. எனவே அண்ணு அவர்கள் ஜூன் திங்கள் 14, 15, 16, 17 நாட்களில் உறுதியாக அச்சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிப் பேசுவார்கள். இராமனுதபுர மாவட்டத்தில் ஆங்காங்கு கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ள தோழர்கள் ஆத்திரப்படாமல், அதைரியம் கொள்ளாமல், கூட்டங்களை மேற்குறிப்பிட்டுள்ள நாட்களுக்கு ஒத்திவைத்து ஆவன செய்ய விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்.

30,000 கைதிகள் மன்னிக்கப்பட்டு விடுதலை

லண்டன், ஏப். 22—

போலந்தில் சுமார் 30,000 கைதிகள் மன்னிக்கப்பட்டு உடனே விடுதலை செய்யப்படுவார்களென்றும், மற்றும் 70,000 பேரின் தண்டனைகள் குறைக்கப்படுமென்றும் செய்திகள் கூறுகின்றன.

மாநில மாநாட்டில் ஓவியக் காட்சி

கழகத் தோழர்களின் கவனத்திற்கு:

திருச்சி மாநில மாநாட்டில் நடைபெறவிருக்கும் ஓவியக் காட்சியில், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் தங்கள் ஊர்களில் நடைபெற்ற கழக நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட படங்களைக் கொண்டுவந்து சிறப்பித்துவிட்டு, மீண்டும் எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—விளம்பரக் குழு

திருக்குறள் வகுப்பு

25—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைபாக்கம், எண் 100, வெள்ளாழத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க அன்பழகன், திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

கழகக் கூட்டம்

★

சென்னை—புதுப்பாக்கம்:
பெருமாள் முதலி ரோடு
(உட்லண்ட்ஸ் அருகில்)
38-வது வட்ட கிளைக் கழகத் திறப்பு
25—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
சே. மு. காதர்

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
இளம்பரிதி
க. வீரபாண்டியன்

தோழர் ஆர். தாயுமான் இயக்கப் பாடல்கள் பாடுவார்.

★

விளாப்பாக்கம் (வ.ஆ.மா.):
(அண்ணு திடலில்)
26—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
தி. கு. நாகநாதன்

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
போளூர்-சுப்பிரமணியம்

'பம்பாயைப் பெற்றுவா'...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தீர்மானத்தை பிரதமர் நேரு அவர்களுக்கும், அவசரமாகக் கூட்டப்பட்ட மக்கள் சபை காங்கிரஸ் கட்சி செயற்குழுக் கூட்டத்திலும், தெளிவாக நிதி அமைச்சர் அறிவித்துவிட்டார்.

எந்தத் தொகுதியிலிருந்து தேஷ்முக் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றாரோ, அதே தொகுதி வாக்காளர்கள், பம்பாய் நகரைப் பெறத் தவறிவிடும்பட்சத்தில், பதவியைவிட்டு வெளியேற வேண்டும் என, தமக்கு ஆணையிட்டிருப்பதாக, நிதி அமைச்சர் பிரதமரிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

இத்தகவலை, காங்கிரஸ் கட்சி செயற்குழுமுன் கூறியதற்கு முன்னதாகவே, நிலைமையை விளக்கி, நேருவிற்கு ஏற்கனவே நிதி அமைச்சர் எழுதிவிட்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

நிதி அமைச்சரின் அறிவிப்பு கேட்டு, பம்பாய் பிரச்சினை அமைதியான சூழ்நிலையில் ஆராயப்பட வேண்டியதாகும் என்ற, வழக்கமாகக் கூறிவரும் சமாதானத்தை, பிரதமர் நேரு மீண்டும் குறிப்பிட்டார்.

மசோதாவை ஆராய்ந்துத் திருத்தம் செய்ய நியமிக்கப்படும் ஆய்வுக் குழுவில், மக்கள் சபை உறுப்பினரான காட்கில் உறுப்பினராக இருக்க மறுத்து விட்டார்.

பம்பாய்நகரை மாராட்டிரத்துடன் இணைப்பதற்கான கால நிர்ணயத்தை அறிவித்தும், அதுவரை பம்பாய் நகரில் தங்கள் தலைநகரை வைத்துக் கொள்வதற்கு மாராட்டிய மண்டலத்தை அனுமதித்தும், அறிவிக்கப்பட்டால், தற்காலிகமாக மாராட்டியர்கள் மனநிறைவு கொள்வர் என்றும் காட்கில், இடைக்கால ஏற்பாடு ஒன்றைக் கூறினர்.

மாராட்டிர மண்டலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களில் பலர், பம்பாய் நகரை மாராட்டியத்துடன் இணைப்பதற்கான அரிய தருணம் இதுவேயாகும் என்றும், அதற்கான சூழ்நிலை அமைந்திருக்கிறது என்றும் குறிப்பிட்ட மனு ஒன்றை இந்தியப் பிரதமருக்கு அளித்துள்ளனர்.

அம்மனுவில், சட்டமந்திரி படாஸ்கர், மாராட்டிர மண்டல காங்கிரஸ் குழு தலைவர் தியோவ்கிரிகார், என். வி. காட்கில், காஜ்ரேல்கார் முதலியவர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

இப்பிரச்னையின் காரணமாக, அமைச்சர் குழுவில் பெரியதோர் நெருக்கடி ஏற்படக்கூடும் எனத் தெரியவருவதுடன், காங்கிரஸ் மேலிடத்திற்கும் மண்டை குத்தல் கண்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாடு

நுழைவுக் கட்டணம்

[மே 17, 18, 19, 20]

		ஆண்	பெண்
நான்கு நாட்களுக்கும் சேர்த்து:			
முதல் பிரிவு	ரூ.	10—0—0	10—0—0
இரண்டாம் பிரிவு	,,	5—0—0	2—8—0
மூன்றும் பிரிவு	,,	3—0—0	1—8—0
தனித்தனி ஒவ்வொரு நாளுக்கும்:			
முதல் பிரிவு	ரூ.	3—0—0	3—0—0
இரண்டாம் பிரிவு	,,	1—8—0	0-12—0
மூன்றும் பிரிவு	,,	1—0—0	0—8—0
தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிக் கட்டணம் (நுழைவு உட்பட)			ரூ. 5—0—0
பொதுக்குழு உறுப்பினரல்லாதோர் வரவேற்புக் குழுக் கட்டணம்:			ரூ. 25—0—0

—விளம்பரக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'ஆக்கிரமிப்பாளர்கள்'

இந்தியா மீது குற்றச்சாட்டு

கராச்சி, ஏப். 22—

இந்தியா, காஷ்மீர், ஜுனகத், சத்தியவார் மாநிலங்களில் எல்லாம், பலாத்காரமாக ஆக்கிரமித்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியும், பாகிஸ்தானின் எல்லையை எவரேனும் தாக்க முற்பட்டால் அதை எதிர்த்து முறியடிக்க பாக். மக்கள் தயாராக இருக்க வேண்டுமென்று கோரியும் பாக். முஸ்லீம் லீக், ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

முஸ்லீம் லீகின் செயற்குழு சீக்கிரம் இந்த அறிக்கை குறித்து விவாதித்து முடிவுகளை மேற்கொள்ளுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.